செய்தி வெளியீடு எண்: 433 நாள் : 07.08.2013

# செய்தி வெளியீடு

திரைப்படத்துறையின் நலவாரியத்தின் இரண்டாவது கூட்டம் திரைப்படத்துறையினர் நலவாரியத்தின் தலைவர் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (07.08.2013) தரமணி, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் பேசும் போது, ''மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா'' அவர்கள் திரைப்படத்துறையினர், சின்னத்திரையினர் மற்றும் அதனை சார்ந்துள்ள குடும்பத்தினர் நலனை கருத்தில் கொண்டு திரைப்படத்துறையினர் நலவாரியத்திற்கு திரைப்படத் துறையின் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் திறமைசாலிகளை தேர்வு செய்து இந்த வாரியக் குழுவின் உறுப்பினர்களாக நியமித்துள்ளார்கள்.

''மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா'' அவர்கள் திரைப்படத் துறையினர் நலனில் மிகுந்த அக்கறைக் கொண்டு தமிழ்த் திரைப்பட உலகம் செழிப்படைய திரைப்படத் தொழிலாளர்களுக்கு பல்வேறு சிறந்த திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள். திரைப்படத்துறையை மேன்மைப்படுத்த எம்.ஜி.ஆர் அரசு திரைப்படக் கல்லூரி வளாகத்தில் குளிரூட்டப்பட்ட படப்பிடிப்புத் தளத்தை ரூ. 1.43 கோடி செலவில் புனரமைத்து தந்துள்ளார்கள். திரைப்படத்துறையின் நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப சிறந்த முறையில் விளங்கிட ரூ.9.5 கோடி மதிப்பீட்டில் அனிமேஷன் மற்றும் காட்சிப்பயன்கள் எனும் புதிய பட்டயப் படிப்புகள் துவங்க

ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் இத்திரைப்படக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் தங்கி பயில ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிதாக தங்கும் விடுதி கட்ட அனுமதி அளித்துள்ளார்கள். மேலும் திரைப்படக்கல்லூரியில் உள்ள முன்காண் திரையரங்கத்தை புதுப்பிக்க ரூ.99 லட்சமும், நவீன டிஜிட்டல் ஒலி, ஒளி அமைப்பதற்காக ரூ.90 லட்சமும் நிதி ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்கள். மேலும் இக்கூட்டத்தில் பேசிய திரைப்படத்துறை நலவாரியத்தின் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் ‘‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா’’ அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், புதிய உறுப்பினர் சேர்த்தல் தொடர்பாக, திரைப்படத்துறையின் 41 சங்கங்களைச் சார்ந்த நிர்வாகிகள் பங்கேற்கும் கூட்டம் நடத்துதல், பழைய உறுப்பினர்களைப் புதுப்பித்தல், புதிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல், ஸ்மார்ட் கார்டு அடையாள அட்டை அறிமுகப்படுத்துதல், புதிய உறுப்பினர்களை சேர்க்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் திரைப்படத்துறையினர் நலவாரியம் தொடர்பான அனைத்து விவரங்களையும் நலத்திட்டம் பெறுவதற்கான அனைத்து விண்ணப்பங்களையும் செய்தித்துறையின் இணைய தளத்தில் வெளியிட முடிவு செய்யப்பட்டது. திரைப்படத்துறையினர் நலவாரியத்தின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் மற்றும் அதனை பெறுவதற்கான தகுதிகள் குறித்து மடிப்பேடுகள் அச்சடித்து வழங்குதல், நலத்திட்ட உதவிகள் வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் திரு. கே. பாலச்சந்தர், திரு. ஆர்.வி. உதயகுமார், இயக்குநர் திரு. பி. வாசு, வசனகர்த்தா

திரு. லியாகத் அலிகான், தயாரிப்பாளர் திரு. இப்ராஹிம் ராவுத்தர், தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் திரு. மோகன் காந்திராமன், நடிகர் ராமராஜன், நடிகை மற்றும் பாடகி திருமதி. டி.கே. கலா செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை செயலாளர் முனைவர். மூ. இராசாராம், இ.ஆ.ப, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை துணைச் செயலாளர் எம். உஷாராணி, வணிகவரித் துறை கூடுதல் ஆணையர் திரு. ஆர். சந்திரமோகன் உள்துறை துணைச் செயலாளர் (சினிமா) திரு. பி.ஜி. தியாகராஜன் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர். முன்னதாக செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மற்றும் உறுப்பினர்/செயலர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப, அனைவரையும் வரவேற்றார்.

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9